களுக்கு வேலை கிடைக்காமல், அவர்களுக்கு வேலை கிடைக்கக்கூடிய நிலைமை ஏற்படுகின்ற காரணத்தினாலேதான் நாம் போட்டோம். ஆனால் அதிலே உண்மையிலேயே நல்ல முறையிலே படித்து முறையாகப் பயிற்சி பெற்றிருப்பார்களேயானால், அவர்களைப் பொறுத்தமட்டில், இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத்தான் நான் சொல்லிக்கொள்கிறேன்.

தமிழாசிரியர்கட்குத் தேர்வுநிலை

* 118 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் மற்றும் திரு. பா. ரா. தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) தமிழாசிரியர்களுக்குத் தேர்வு நிலை கணக்கிடும்போது, இரண்டாம் நிலை பணிக்காலத்தினையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று, அரசுக்கு முறையீடு ஏதும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) தேர்வு நிலைக்கான நிபந்தனைகள் எல்லாப் பணிகளுக்கும் பொதுவானதாகும். ஒரு பணியில் தேர்வு நிலைக்கு வேறு பணியில் உள்ள காலத்தைக் கணக்கில் கொள்வதில்லை. எனவே இக்கோரிக்கை ஏற்கத் தக்கதல்ல என்று அரசு முடிவெடுத்துள்ளது.

திரு. ம. சங்கரலிங்கம்: தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலே இருக்கக் கூடிய இரண்டாம் நிலைப் பணிக்காலத்தை முதல்நிலைப் பணிக்காலமாக மாற்றிய பிறகு, இரண்டும் ஒன்றாகக் கருதப்பட்ட பிறகு, அந்தப் பணிக் காலத்தையும் சேர்த்து எடுத்துக்கொள்வதுதானே முறை. அதை அரசு பரிசிலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களை நாம் முதல் நிலைக்கு மாற்றுகிறோம். முதல் நிலைக்கு உயர்த்துகிறோம். அவ்வளவு தானே தவிர, வேறல்ல. நாம் இரண்டாம் நிலையிலே பணி புரிந்த காலத்தை முதல்நிலையாக ஏற்றுக் கொள்ளவில்லை. அப்படி நாம் அதை ஏற்றுக்கொள்வதற்கில்லை. அப்படி ஏற்றுக்கொண்டிருந்தால், மற்ற எல்லாத் துறைகளிலும் இதுபோன்று பல்வேறு பிரச்சினைகள் வரும்.

B.E. Degree Course.

* 119 Q.—Thiru M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) the number of Polytechnic students who were selected for admission to the First Year B.E. Degree Course (Regular) during 1981–82 and 1982–83; and

(b) whether there is any proposal with the Government, to reserve a certain percentage of seats in First Year B.E. Degree Course (Regular) for Polytechnic students?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) 1981-82 மற்றும் 1982-83 ஆம் ஆண்டுகளில் பொறியியற் பட்டப்படிப்புக்கு விண்ணப்பித்த பட்டயப்படிப்பு படித்த மாணவர்களின் எண்ணிக்கையும் அவர்களில் தேர்வு செய்யப் பட்டோரின் எண்ணிக்கையும் வருமாறு :—

	விண்ணப்பித்தோர்.	தேர்வு பெற்றோர்.
1981-82	119	11
1982-83	115	11

(இ) பொறியியற் கல்லூரி மாணவர் சேர்க்கையின்போது. தனியாகச் சில இடங்களை பட்டயம்பெற்ற மாணவர்களுக்கென ஒதுக்கும் கருத்துரு எதுவும் அரசிடம் கிடையாது.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, பாலிடெக்னிக்கில் மூன்று ஆண்டுகள் படித்து அதற்குப் பிறகு என்ஜினியரிங் கல்லூரியிலே அவர்கள் பி.ஈ. வகுப்பிலே சேர்வதற்கு விண்ணப்பம் செய்கின்றபோது. பாலிடெக்னிக் படித்தவர்களுக்கு முன் உரிமை கொடுக்கின்ற அல்லது ஒரு சதவிகிதத்தை ஒதுக்குகின்ற முறை இருந்தால்தான், ஹையர் செகண்டரி முடித்தவுடனே அல்லது எஸ்.எஸ்.எல்.சி. முடித்தவுடனே, பாலிடெக்னிக்குக்குப் போகின்ற ஒரு முறை உருவாகும். நாம் மேல்நிலைப் பள்ளிக்கு வந்த பிறகு, இன்றைக்கு கல்லூரிக் கல்விக்குள்ளேயே நுழையாமலே, தொழில் கல்வியிலே மாணவர்களை ஈடுபடுத்த. தொழில் பிரிவுக்குச் செலுத்த வேண்டும் என்று நினைக்கின்றபோது, இத்தகைய சதவிகிதத்தை ஒதுக்குவது சிறப்பாக அமையும். அதனை அரசு பரிசீலனை செய்து பாலிடெக்னிக் படிப்புக்கு தொழில் கல்வி கல்லூரிக்கு பி.ஈ. பட்டப் படிப்புக்கு விண்ணப்பிக்கின்றவர் களுக்கு ஒரு சதவிகிதம் ஒதுக்க அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, பாலிடெக்னிக்கில் படித்தவர்கள் மூன்று ஆண்டுக் காலம் படித்திருக் கின்றார்கள் என்ற நிலைமைகள் இருக்கின்ற காரணத்தினாலே, அவர்களுக்குப் பகுதி நேரப் பட்டப்படிப்புக்கு நாம் வழி செய்திருக்கிறோம். உண்மையிலேயே இந்த வாய்ப்பு தரவேண்டுமென்று கருதுவோமேயானால், அவர்களுக்காக

என்று தரப்படுகின்ற வாய்ப்புக்களை அதிகப்படுத்தலாமே தவிர, மற்ற மாணவர்களுக்குக் கொடுக்கின்ற இடங்களிலே ஒதுக்குவது என்பது இப்போது இருக்கின்ற நிலையிலே இயலாத காரியம். ஏனென்றால், இதுபோலவே சி.பி.எஸ்.ஈ.-யிலே படித்த மாணவர்கள் இடத்தை ஒதுக்கச் சொல்கின்றார்கள். வேறு சில மாணவர்களுக்கு இப்படிக் கேட்டுக்கொண்டிருப்பதால், இன்றைய நிலையில் அது சாத்தியமில்லை.

B.Tech. (Textiles) Course.

* 120 Q.—Thiru S. MUTHUSAMY : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether any percentage of seats has been reserved for Diploma (Textiles) candidates, for admission into B.Tech. (Textiles) Course in Dr. Alagappa Chettiar College of Technology, Guindy; and

(*b*) if so, the number of students admitted during the academic years 1980–81 and 1981–82?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Apprentice Teachers.

* 121. Q.—Thiru P. R. THOMAS (on behalf of Thiru D. Santosham) : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether it is a fact that the services of the B.T. Teachers, who had entered service between 1st April 1970 and 3rd March 1973, and who were subsequently selected by the Tamil Nadu Public Service Commission were regularised from the date of their first entering into service; and

(*b*) if so, whether such benefit will be extended to the B.T. Teachers also, who entered service as Apprentice B.T. Teachers, during 1st October 1970 to 30th September 1972 and subsequently selected by the Tamil Nadu Public Service Commission during 1973?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) பட்டதாரி பணி பழகும் ஆசிரியர்களுக்கு படிகள் எதும் இல்லாத (Consolidated Monthsy Emoluments) மொத்த மாதச்சம்பளமாக ரூ. 17 மட்டுமே அளிக்கப்பட்டுள்ளதால் அவர்கள் பணி பழகும் ஆசிரியராகப்